**செய்தி வெளியீடு எண் : 1576** **நாள் : 12.09.2022**

<u>செய்தி வெளியீடு</u>

**கொளத்தூர், கௌதமபுரம் திட்டப்பகுதியில் ரூ.111.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 840 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து, ரூ.1.95 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.1.94 கோடி மதிப்பீட்டிலான பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (12.9.2022) சென்னை, கொளத்தூரில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கௌதமபுரம் திட்டப்பகுதியில் ரூ.111.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 840 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார். மேலும், 1 கோடியே 95 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டடங்கள், நூலகக் கட்டடம் மற்றும் பூங்கா அமைப்பதற்கான திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 1 கோடியே 94 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை தொடங்கி வைத்தார்.

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கௌதமபுரம் திட்டப்பகுதியில் பழுதடைந்த பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு தூண் மற்றும் 14 அடுக்குகளுடன் 840 புதிய குடியிருப்புகள் ரூ.111.80 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களுடன் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்காக கட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடியிருப்பும் 406 சதுர அடி கட்டுமானப் பரப்பில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை மற்றும் கழிவறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டப்பகுதியில் பழைய குடியிருப்புகளில் வாழ்ந்த 400 குடும்பங்கள் மற்றும் கூடுதலாக கட்டப்பட்டுள்ள 440 குடியிருப்புகள் சென்னை மாநகரில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு குடியிருப்பிற்கான மதிப்பீடு ரூ.13.31 இலட்சம் ஆகும். இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.1.50 இலட்சம், மாநில அரசின் பங்களிப்பு ரூ.6 இலட்சம் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பு ரூ.5.81 இலட்சமாக இருந்தது.

பயனாளிகளின் பங்களிப்பு தொகை அதிகமாக இருந்ததை பயனாளிகளின் பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மறுகட்டுமான திட்டத்தின் கீழ் உள்ள ஒதுக்கீடுதாரர்களுக்கு பயனாளிகளின் பங்களிப்பு தொகையை தவணை முறையில் மாதந்தோறும் ரூ.250/- வீதம் 20 ஆண்டுகள் வரை செலுத்தலாம் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், கூடுதலாக கட்டப்பட்டுள்ள 440 குடியிருப்புகளுக்கு பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவின் கீழ், பயனாளிகளின் பங்களிப்பு தொகையான 5.81 இலட்சம் ரூபாயினை அப்பயனாளிகளின் பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி ரூ.5 இலட்சமாக குறைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவில் தகுதி வாய்ந்த பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இதனால் ஒரு குடியிருப்பிற்கான திட்ட செலவினம் ரூ.13.31 இலட்சத்தில் ஒன்றிய அரசின் பங்களிப்பு தொகை ரூ.1.50 இலட்சம் போக, மாநில அரசின் பங்களிப்பு தொகை மறுகட்டுமானப் பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.11.40 இலட்சமாகவும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.6.81 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

கௌதமபுரம் திட்டப்பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள 840 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, 400 குடும்பங்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் மற்றும் வீடுகளுக்கான சாவிகளை வழங்கினார்.

இத்திட்டப்பகுதியில் அடிப்படை வசதிகளான மழை நீர் கால்வாய், கான்கீரிட் சாலைகள், தெரு மின்விளக்குள், கீழ்நிலை நீர் தேக்க தொட்டி, மின்தூக்கி, தரைத்தள வாகன நிறுத்துமிடம், தடையில்லா மின்சாரத்திற்கான மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும்,

குடியிருப்போர் நலச் சங்கம் அமைக்கப்பட்டு குடியிருப்புகளை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கொளத்தூர், கௌதமபுரம், ரமணா நகரில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 74 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள இரண்டு அங்கன்வாடி மையக் கட்டடங்கள் மற்றும் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நூலகக் கட்டடம், ஜவஹர் சாலையில் ரமணா நகர் திறந்தவெளி நிலத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 80 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய பூங்கா, என மொத்தம் 1 கோடியே 95 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கொளத்தூர், ஜவகர் நகர், சிவஇளங்கோ சாலையில் 24 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பணிமனை அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்து, எஸ்.ஆர்.பி. கோயில் வடக்கு, திரு.வி.க. நகர் 4–வது தெருவில் 91 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் உந்து ஏற்று நிலையம் கட்டுமானப் பணி மற்றும் கழிவுநீர் உந்து குழாய் பதிக்கும் பணி மற்றும் வெற்றி நகரில் 78 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய மதிப்பீட்டில் புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர், ஜவஹர் நகரில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 89 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு.ஆர். கிரிராஜன், திரு.என்.ஆர். இளங்கோ, துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹிதேஸ்குமார் எஸ். மக்வானா, இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் (பொறுப்பு) திரு. சங்கர்லால் குமாவத், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநர் திரு. மீ. தங்கவேல், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

.........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in